**மதுக்கரை நகராட்சியில் 17.10.2022ம் நாள் நடைபெற்ற அவசர மன்றக்கூட்டத்தின் தீர்மானம் நகல்கள்.**

**பொருள் எண்.01**

இந்நகராட்சியின் உழுவை ஓட்டுநர் திரு. மு. திருமலைசாமி அவர்களின் 25.07.2022ம் நாளிட்ட கடிதத்தின்படி இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN37AQ3055 டிராக்டர் டிரைலர் வாகனத்திற்கு சர்வீஸ் செய்து 2022–2023ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று பெற வேண்டுமென அறிக்கை செய்துள்ளார். மேற்கண்ட விபரத்திற்கு வாகன சர்வீஸ் பணிகளுக்கு 27.07.2022ம் நாளில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விலாசம் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள். தேஜஸ்வினி ஆட்டோ<br>எண்.509ஜி செட்டிபாளையம் ரோடு<br>மதுக்கரை, கோயம்புத்தூர்–641105. | ரூ.198887/– |
| 2 | திருவாளர்கள். ஸ்ரீ சரவணா ஆட்டோ கேரேஜ்<br>எண்.33 சரஸ்வதி தெரு எண்.1<br>மருதமலை மெயின் ரோடு<br>பி.என்.புதூர், கோயம்புத்தூர்–641105. | ரூ.205911/– |
| 3 | திருவாளர்கள். ஸ்ரீ மூகாம்பிகை ஆட்டோ<br>அண்டு டீசல் ஒர்க்ஸ்<br>எண்.5A காமராஜ் தெரு<br>காவேரி நகர், மேட்டுப்பாளையம் ரோடு<br>கோயம்புத்தூர்–641105. | ரூ.205708/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். தேஜஸ்வினி ஆட்டோ, மதுக்கரை நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும், அதற்கான செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.913 /2022/அ1)

**அலுவலக குறிப்பு :**

பொதுமக்களின் சுகாதார நலன் கருதி அவசர அவசியமாக நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் திருவாளர். தேஜஸ்வினி ஆட்டோ நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும் அதற்கான செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.85**

மன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.02**

மதுக்கரை நகராட்சி துப்புரவு அலுவலரின் 20.06.2022ம் நாளிட்ட அறிக்கையின்படி நகரின் 27 வார்டுகளில் உள்ள வீடுகளில் தினசரி குப்பைகளை சேகரிக்க பயன்படுத்தப்பட்டு வரும் 50 தள்ளுவண்டிகளும் பழுது ஏற்பட்டு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது எனவும், இவற்றை உடனடியாக பழுது நீக்கம் செய்து கொடுக்க வேண்டுமெனவும் அறிக்கை செய்துள்ளார். மேற்காணும் விபரத்திற்கு குப்பைகளை அப்புறப்படுத்த பயன்படுத்தப்படும் தள்ளுவண்டிகளை பழுது நீக்கம் செய்து கொடுப்பதற்கு கூலி உள்பட சரக்கு மற்றும் சேவை வரி தவிர்த்து செலவினம் குறித்து 03.10.2022ம் நாளில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் வருமாறு.

| வ. எண். | விலைப்புள்ளிதாரர்கள் பெயர் மற்றும் விலாசம் | ஒரு வண்டிக்கான செலவு ரூபாய் |
|---|---|---|
| 1 | பிரேம் இந்தியா<br>97–C அன்னபூர்ணா லே அவுட்<br>புதிய சித்தாபுதூர், கோயம்புத்தூர். | ரூ.5200/– |
| 2 | சன் பார்ம் சோலார் எனர்ஜி<br>6/366 ஊர்மண்டம்பாளையம்<br>ஜி.என். மில்ஸ், கோயம்புத்தூர் | ரூ.5400/– |
| 3 | ஸ்ரீ பாலாஜி ஸ்டீல் பேப்<br>28/16 எல்.ஐ.சி காலனி<br>எஸ்டேட் அஞ்சல், கோயம்புத்தூர் | ரூ.5600/– |

மேற்கண்ட விபரத்திற்கான மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதிம் கொடுத்துள்ள பிரேம் இந்தியா நிறுவனத்தாரின் குறைந்த விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1051/2022/அ1).

**அலுவலக குறிப்பு :**

பொதுமக்களின் சுகாதார நலன்கருதி வீடு வீடாக குப்பைகளை சேகரித்து அப்புறப்படுத்த பயன்படுத்தப்படும் தள்ளுவண்டிகளை அவசர அவசியமாக பழுது நீக்கம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள பிரேம் இந்தியா நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும், அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.86**

அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.03</u>**

இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவு வாகன ஓட்டுநர் திரு. வி. விமல்குமார் என்பவரின் 01.08.2022ம் நாளிட்ட கடிதத்தில் இந்நகராட்சி டாடா ஏசி வண்டி TN37BV7463 வாகனத்திற்கு 31.08.2022ம் நாளுடன் தகுதிக்காலம் முடிந்து விட்டதாகவும், இவ்வாகனத்திற்கு 01.09.2022ம் நாள் முதல் தகுதிச்சான்று பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிக்கை செய்துள்ளார்.

மேற்காணும் விபரத்திற்கு நகராட்சி டாடா ஏசி வாகனத்திற்கு போக்குவரத்துத் துறையில் தகுதிச்சான்று பெறும் பொருட்டு வாகனத்தில் உள்ள அனைத்து பழுதுகளை சரிசெய்து உரிய கட்டணங்களையும் செலுத்துவதற்கு கடந்த 05.09.2022ம் நாளில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் வருமாறு.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | விலைப்புள்ளி விபரம் ரூபாய் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள். தேஜஸ்வினி ஆட்டோ<br>எண்.509ஜி செட்டிபாளையம் ரோடு<br>மதுக்கரை, கோயம்புத்தூர்–641105. | ரூ.148428/– |
| 2 | திருவாளர்கள். ஸ்ரீ மூகாம்பிகை ஆட்டோ<br>அண்டு டீசல் ஓர்க்ஸ்<br>எண்.5A காமராஜ் தெரு<br>காவேரி நகர், மேட்டுப்பாளையம் ரோடு<br>கோயம்புத்தூர்–641105. | ரூ.155270/– |
| 3 | திருவாளர்கள். ஸ்ரீ சரவணா ஆட்டோ கேரேஜ்<br>எண்.33 சரஸ்வதி தெரு எண்.1<br>மருதமலை மெயின் ரோடு<br>பி.என்.புதூர், கோயம்புத்தூர்–641105. | ரூ.156323/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். தேஜஸ்வினி ஆட்டோ, மதுக்கரை நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும், அதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.976 /2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற வேண்டியதன் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள் தேஜஸ்வினி ஆட்டோ நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும் அதற்கான செலவினத்தை மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.87</u>**

அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.04**

இந்நகராட்சியின் உழுவை ஓட்டுநர் திரு. ஜி. மாரிமுத்து அவர்களின் 12.09.2022ம் நாளிட்ட கடிதத்தின்படி இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN37Q6934 டிராக்டர் வாகனத்திற்கு இன்ஜினில் சத்தம் அதிகமாக வருகிறது எனவும் இவற்றை உடனே சரிசெய்ய வேண்டுமென அறிக்கை செய்துள்ளார். மேற்கண்ட விபரத்திற்கு வாகன சர்வீஸ் பணிகளுக்கு 03.10.2022ம் நாளில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விலாசம் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள். தேஜஸ்வினி ஆட்டோ<br>எண்.509ஜி செட்டிபாளையம் ரோடு<br>மதுக்கரை, கோயம்புத்தூர்–641105. | ரூ.8180/– |
| 2 | திருவாளர்கள். ஸ்ரீ சரவணா ஆட்டோ கேரேஜ்<br>எண்.33 சரஸ்வதி தெரு எண்.1<br>மருதமலை மெயின் ரோடு<br>பி.என்.புதூர், கோயம்புத்தூர்–641105. | ரூ.9119/– |
| 3 | திருவாளர்கள். ஸ்ரீ மூகாம்பிகை ஆட்டோ<br>அண்டு டீசல் ஒர்க்ஸ்<br>எண்.5A காமராஜ் தெரு<br>காவேரி நகர், மேட்டுப்பாளையம் ரோடு<br>கோயம்புத்தூர்–641105. | ரூ.9210/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். தேஜஸ்வினி ஆட்டோ, மதுக்கரை நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும், அதற்கான செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1128 /2022/அ1)

**அலுவலக குறிப்பு :**

பொதுமக்களின் சுகாதார நலன் கருதி அவசர அவசியமாக மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத்தலைவரின்முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் திருவாளர். தேஜஸ்வினி ஆட்டோ நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும் அதற்கான செலவினம் பொதுநிதியில் மேற்கொண்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.88**

மன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.05**

இந்நகர் மன்ற உறுப்பினர்கள் திரு. ந. ராமு, 15 வது வார்டு நகர்மன்ற உறுப்பினரும், திருமதி. எ. பிரமிளா ஆரோக்கியமேரி, 22வது வார்டு நகர்மன்ற உறுப்பினரும், திரு. அ.ப. தங்கராஜ், 23வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்களின் 03.10.2022ம் நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளபடி, கீழ்காணும் இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார்கள் மூலம் பகிர்மானக் குழாய்கள் வழியாக பொதுமக்களுக்க தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

| வ. எண் | ஆழ்துளை கிணறு அமைக்க வேண்டிய இடங்கள் | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | 15வது வார்டு காந்தி நகர் வடக்குப்பகுதி | ரூ.5.00 லட்சம் |
| 2 | 22வது வார்டு சர்ச் காலனி குரு கார்டன் பகுதி | ரூ.5.00 லட்சம் |
| 3 | 23வது வார்டு பாலு என்கிளேவ் பகுதி | ரூ.5.00 லட்சம் |
| | **மொத்தம்** | **ரூ.15.00 லட்சம்** |

மேற்காணும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.15.00 லட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். /2022/அ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.89**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.06**

1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் செயலாட்சி அதிகாரியின் நெருக்கடிகால அதிகாரங்களின்படி அவசர அவசியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் வேலை விபரப்படியல்கள்

| வரிசை. எண் | அவசர அவசிய பொது வேலைகள் விபரம் | செலவினத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | மதுக்கரை நகராட்சி 5 வது வார்டு மலைச்சாமி கோவில் தெருவில் அமைக்கப்பட்டுள்ள பெண்கள் பொது கழிப்பறை பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலை இருந்ததால் அவற்றை அவசர அவசியமாக பழுது நீக்கம் செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவந்த வகையிலும் அதே இடத்திற்கு அருகில் அமைந்திருந்த ஆண்கள் பொது கழிப்பறையும் பயன்படுத்த இயலாத நிலையில் இருந்ததால் அவற்றை அவசர அவசியம் கருதி பழுது நீக்கம் செய்து கொடுத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்த நிலையில் மொத்த செலவினம் மேற்கொள்ளப்பட்டது. | ரூ.69620/– |
| 2 | முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ள பள்ளிகளுக்கு அவசர அவசியமாக வர்ணங்கள் பூசிக் கொடுக்க வேண்டியதன் பொருட்டு பெயிண்ட் வாங்கிய வகையிலும் கூலிகள் வழங்கிய வகையிலும் செலவினம் மேற்கொள்ளப்பட்டது. | ரூ.13500/– |
| 3 | மதுக்கரை நகராட்சி 15 வது வார்டு காந்தி நகர் வடக்குப் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு அவசர அவசியமாக குடிநீர் வழங்கும் பொருட்டு குடிநீர் குழாய்கள் கூலி ஆட்களை வைத்து தோண்டியதும் அவற்றை ஐந்து நாட்கள் வேலை செய்த வகையில் மண் தோண்டப்பட்டதை சரி செய்த வகையிலும் ஏற்பட்ட கூலி ஆட்கள் செலவினம் மேற்கொள்ளப்பட்டது. | ரூ.29750/– |

பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட விபரத்திற்கான அவசர அவசியப் பணிகளை உடனடியாக செய்து முடித்தமைக்கும் அதற்கான செலவினங்களை நகராட்சி நிதியிலிருந்து பட்டுவாடா செய்தமைக்கும் மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.877/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.90</u>**

மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்.07</u>**

மதுக்கரை நகராட்சியில் 2022–2023ம் ஆண்டில் கட்டிட வரைபட வரைவாளராக பதிவு செய்து தர கோரியுள்ள கீழ்காணும் விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி | விண்ணப்பித்த நாள் | கல்வித்தகுதி |
|---|---|---|---|
| 1 | S. சிவசக்திவேல்<br>387, பெருமாள் கோவில் வீதி<br>குரும்பபாளையம், மதுக்கரை,<br>கோயம்புத்தூர்–641105. | 12.10.2022 | Diploma in Civil Engineering |

மேற்கண்ட விண்ணப்பதாரர்கள் தொழில்நுட்பக்கல்வித்தகுதி பெற்றுள்ளதால், அவர்களை நகராட்சி கட்டிட விதிகளுக்கு உட்பட்டு கட்டிட வரைபட வரைவாளராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1449/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.91</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.08</u>**

அரசு முதன்மைச் செயலர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3329/எஸ்.2/2022–2 நாள்.13.07.2022ன் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி, சென்னை மாமல்லபுரத்தில் 44வது செஸ் ஒலிம்பியாட் 2022 போட்டிகள் நடைபெறுவதை முன்னிட்டு கோயம்புத்தூர் மாவட்டத்தில் செஸ் ஒலிம்பியாட் ஜோதியை பெறுதல் மற்றும் 19 மாவட்டங்களுக்கு மாதிரி ஜோதியை ஒப்படைக்கும் விழாவினை கொடிசியா அரங்கில் மாண்புமிகு அமைச்சர்களுடன் இணைந்து 25.07.2022 அன்று நடைபெற்றது.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.3498/2022/கை1 நாள்.21.07.2022ன்படி மதுக்கரை நகராட்சி ஆணையாளருக்கு விழா மேடைக்கு அருகில் அலங்கால வடிவமைப்புகள் அமைத்தல், வாகன ஊர்த்தி அலங்காரங்கள், மேடை ஒலிபெருக்கிகள், சாலையில் செஸ் போர்டு வண்ணம் தீட்டுதல், செஸ் ஒலிம்பியாட் பணிச்சிற்பம் உருவாக்குதல் போன்ற பணிகளை குறித்த காலத்தில் செய்திட உரிய முன்னேற்பாடுகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதன்படி மேற்கண்ட வேலைகளுக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விலாசம் | விலைப்புள்ளி ரூபாய் |
|---|---|---|
| 1 | SHOPNIC ENTERPRISE<br>Y93 Golden Nagar,<br>Nanjundapuram main road,<br>Podanur, Coimbatore-23. | ரூ.76700/– |
| 2 | HOLIDAY NEST (Event Contractor)<br>1299/6 STV Nagar<br>Navaindia, Coimbatore. | ரூ.73561/– |
| 3 | GNANAM TRADERS<br>No.264/13 Sathyananthan Complex,<br>IAF Road, Tambaram<br>East Chennai. | ரூ.77880/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். HOLIDAY NEST (Event Contractor) நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1458/2022/அ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.92**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.09**

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.22195/2021/ஆ2 நாள்.26.07.2022ன்படி விலையுயர்ந்த அரசு புறம்போக்கு நிலங்கள், இனங்களில் மீண்டும் எளிதில் ஆக்கிரமிப்பு ஏற்படக்கூடிய இனங்கள், சமீபத்தில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இனங்கள், ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட எதிர்காலத்தில் ஆக்கிரமிப்பு ஏற்படக்கூடிய காலியிடங்கள், காலாவதியான குத்தகை இனங்களில் உள்ள அரசு நிலங்கள், நிபந்தனை ஒப்படையில் மீளப் பெற்ற அரசு நிலங்கள், மேலும் இதர புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு ஏற்படாதவாறு தடுக்க வேலிகள் அமைத்து நிலங்களை பாதுகாத்திட நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

மதுக்கரை வட்டாட்சியரின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.3165/2022/அ2 நாள்.27.09.2022ன்படி மதுக்கரை வட்டம், மதுக்கரை கிராம. க.ச.எண்.593ல் இருக்கும் ஆக்கிரமிப்புகளை அகற்றி 0.24.05 பு.ஹெ அளவிலான இடத்தில் வேலிகள் அமைத்து பாதுகாக்கும் பணிக்கான செலவுத்தொகை ரூ.95000/– (ரூபாய் தொன்னூற்றி ஐந்தாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்காணும் உத்தரவுகளுக்கிணங்க மதுக்கரை கிராமம் க.ச.எண்.593க்கு உட்பட்ட நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி 0.24.05 பு.ஹெ அளவிலான இடத்தில் பாதுகாப்பு வேலிகள் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.95000/–க்கு திறந்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரி உரிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு அரசு நிலத்திற்கு வேலிகள் அமைக்கும் பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1267/2022/அ1).

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.93**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

இந்நகராட்சியின் உழுவை ஓட்டுநர் திரு. சி. சாமிநாதன் அவர்களின் 01.09.2022ம் நாளிட்ட கடிதத்தின்படி இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN37CE9128 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்து 2022–2023ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று பெற வேண்டுமென அறிக்கை செய்துள்ளார். மேற்கண்ட விபரத்திற்கு வாகன சர்வீஸ் பணிகளுக்கு 10.10.2022ம் நாளில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விலாசம் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள். தேஜஸ்வினி ஆட்டோ<br>எண்.509ஜி செட்டிபாளையம் ரோடு<br>மதுக்கரை, கோயம்புத்தூர்–641105. | ரூ.189001/– |
| 2 | திருவாளர்கள். ஸ்ரீ சரவணா ஆட்டோ கேரேஜ்<br>எண்.33 சரஸ்வதி தெரு எண்.1<br>மருதமலை மெயின் ரோடு<br>பி.என்.புதூர், கோயம்புத்தூர்–641105. | ரூ.197173/– |
| 3 | திருவாளர்கள். ஸ்ரீ மூகாம்பிகை ஆட்டோ<br>அண்டு டீசல் ஒர்க்ஸ்<br>எண்.5A காமராஜ் தெரு<br>காவேரி நகர், மேட்டுப்பாளையம் ரோடு<br>கோயம்புத்தூர்–641105. | ரூ.194424/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். தேஜஸ்வினி ஆட்டோ, மதுக்கரை நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும், அதற்கான செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1125 /2022/அ1)

**அலுவலக குறிப்பு :**

நகராட்சி வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு வரப்பெற்ற குறைந்த விலைப்புள்ளிதாரர் திருவாளர். தேஜஸ்வினி ஆட்டோ, மதுக்கரை நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கி அதற்கான செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.94**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட க.ச.எண்.180/3B3, 180/3B4, 180/3B5, 180/3B6, 180/3B1B, 180/3B2Bல் 2.45.25 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு. K. கணேசமூர்த்தி மற்றும் 3 நபர்களுக்கு திட்ட அனுமதி எண் 343/2022 என எண்ணிடப்பட்டு ம.வ (கோ.உ.தி.கு) எண்: 288/2022ன்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரால் பொது ஒதுக்கீடு மற்றும் ரோடு தான செட்டில்மெண்ட் ஆகியன மதுக்கரை சார்பதிவாளர் அலுவலக பத்திர பதிவு எண்.6543/2022 நாள்.13.08.2022ன்படி 3558.00 சதுர மீட்டர் விஸ்தீரணம் உள்ள சாலை பரப்பும், 38.85 சதுர மீட்டர் பரப்பு கொண்ட பொது ஒதுக்கீடு இடமும் தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கு 33.66 சதுர மீட்டர் இடமும் நகராட்சிக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் சாலைகள் தார்சாலைகளாகவும், அடிப்படை வசதிகளான வடிகால், சிறுபாலங்கள், தெருவிளக்கு மற்றும் குடிநீர் குழாய் வசதிகள் ஏற்படுத்தவும் உரிய கட்டணங்கள் வசூலித்து மனைப்பிரிவு இறுதி உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1107/2022/அ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றத்தில் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.95**

அங்கீகரிக்கப்பட்டது.

(ஒ/ம்) நா. நூர்ஜஹான்
நகர் மன்றத்தலைவர்
மதுக்கரை நகராட்சி

இடம் : மதுக்கரை
நாள் : 17.10.2022

---

//உண்மை நகல் உத்திரவுபடி//

ஆணையாளர்
மதுக்கரை நகராட்சி